Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | [illegible] |
| 6 மாதம் | 25-00 | [illegible]-60 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 13 ஆம் நாள் துல்கஃதா 11 (26-3-64) வியாழக்கிழமை இதழ் 45

# யோகசுவாமிகள் சோதியுட் கலந்தார்

## யாழ்ப்பாணம் இதுவரை கண்டிராத உள்ளமுருக்கும் பக்திக் காட்சி

யாழ்ப்பாணம், புதன்

**'அரகரமகாதேவா' என ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் கூப்பிய கரங்களுடன்கோஷமிட யாழ்ப்பாணத்துத்தவமுனி, யோகசுவாமிகளின் சிதைக்கு அவரது பக்தர்கள் கற்பூரதீபம் வைத்து தீமூட்டிய காட்சி கண்டோர் மனதையும் கரைந்துருகச் செய்தது.**

சென்ற செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்புத்துறையிலுள்ள தமது ஆசிரமத்தில் சிவபதமடைந்த யோக சுவாமிகளின் பூதவுடல் திறந்த மரப்பேழையின்மீது வைக்கப்பட்டு மலர்களாலும் மலர்மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிவபதமடைந்த நேரம் முதல் தகனம் செய்யப்படும்வரை தேவார திருவாசகங்களும் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைப்பாடல்களும் பாடப்பட்டன.

நேற்றுக்காலை சரியாகஎட்டு மணிக்கு பூதவுடல் மலர்களால் அமைக்கப்பட்ட சதுரவடிவமான திருத்தொங்கல் தொட்டியில் வைக்கப்பட்டு ஊர்வலமாக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### கற்பூரதீபம்

ஊர்வலத்தில் பெருந்தொகையான ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கலந்து கொண்டனர். கொழும்புத்துறை மகாவித்தியாலய மாணவர்கள் ஊர்வலத்தின் முன்னே ற்பூரச்சட்டிகள் கைகளிலேந்தி தேவார, திருவாசகம் பாடியவண்ணம் சென்றனர்.

பெண்கள் ஒருபுறம் கூட்டம் கூட்டமாகக் கற்பூரச்சட்டிகளையும், ஊதுபத்திகளையும் ஏந்தியபடி கண்களில் நீர்சொரிய தேவாரம், திருவாசகங்களைப் பாடிக் கொண்டும் நற்சிந்தனைப் பாடல்களை இசைத்துக் கொண்டும் சென்றனர். ஆண்களும் கற்பூரதீபம்தாங்கி மலர்களை இடையிடையே சொரிந்து சென்றனர். "அழுகையர், தொழுகையர்" என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் திருப்பள்ளியெழுச்சியை இக் காட்சி நினைவூட்டியது.

சுவாமிகளின் ஆசிரமத்திலிருந்து துண்டிமயானம்வரையுள்ள வீதிகளின் இருமருங்கும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் வீடுகள் தோறும் குத்துவிளக்குகள் வைக்கப்பட்டு மலர்கள் சொரிந்தும் தீபாராதனை செய்தும் கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தனர்.

### சோதி தரிசனம்

சரியாக காலை ஒன்பது இருபதுக்கு பூதவுடல் மயானத்தை வந்தடைந்தது. யாழ்ப்பாணத்தின் சரித்திரத்திலேயே இல்லாதவாறு பெருந்தொகையான பெண்களும் மயானத்தில் திரண்டு நின்றனர். மலர்களாலும் வெண்துகிலாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த சிதைமீது சுவாமிகளின் பூதவுடல் அரோகரா கோஷத்துடன் வைக்கப்பட்டது. இதன்பின் கொக்குவில் குமாரசாமிப்புலவர் தேவாரம் பாடினர். ஆண்களும் பெண்களும் சிரமேல் கரங்குவித்து அரகரமகாதேவா' எனப், பொங்கிவந்த அழுகையையும் அடக்கிக் கொண்டு கண்ணீர் சிந்தியபடி கோஷமிட கற்பூர தீபம் சிதைமீது மூட்டப்பட்டது. ஜோதி தரிசனத்துடன் அடியார்களின் பக்திப்பாடல்களும் கலந்து ஒலித்தது.

## "தமிழர் ஐக்கியமுன்னணி இப்போது பயன்தராது"

நல்லூர், வியாழன்

இலங்கை அரசியலில் ஓர் குழப்பமான நிலை தற்போது நிலவிவருவதனால் தமிழர் ஐக்கிய முன்னணி பற்றி சிந்திப்பது பயன்தராது என்ற அபிப்பிராயம் பல தமிழ்ப் பிரமுகர்களிடையே நிலவி வருவதாக அறியப்படுகிறது. தமிழர் முன்னணி அமைக்கும் யோசனை கடந்த ஞாயிற்றுக் கிழமை திருமலையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் சமாஜக் கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டதாயினும் அந்த யோசனை விவாதிக்க அனுமதிக்கப்படவில்லை.

கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் இந்தப் பிரேரணையைப் பிரேரித்தபோது கட்சித் தலைவர் திரு. ச. மு. இராசமாணிக்கம் அந்த யோசனையை சமாஜக்கூட்டத்தில் விவாதிக்க அனுமதிக்க முடியாதெனத் தெரிவித்தார். இந்த முன்னணி அமைக்கும் யோசனையை வருகின்ற சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கும் கட்சிக் கூட்டத்தில் விவாதிக்க சிலர் முயன்று வருவதாகவும் தெரிகிறது.

தற்போதைய சூழ்நிலையில் ஐக்கிய முன்னணி உருவாக்கும் யோசனையில் காலத்தைக் கழிப்பதைவிட தமிழ்மொழி உரிமைக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைபற்றி ஆலோசனை செய்வது பொருத்தமானதென்று தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த வார இறுதியில் பிரதம மந்திரியைச் சந்தித்து நிலைமை பற்றி விவாதிக்க எண்ணியிருப்பதாக செனட்டர் திரு. சு. நடேசபிள்ளை தெரிவித்தார்.

நடுநிலைமை நாடுகள்

## உச்சி மகாநாடு கெய்ரோவில் நடைபெறும்

### எட்டு நாடுகளைக்கொண்ட உபகமிட்டி நியமிக்கப்பட்டது

கொழும்பு, புதன்

நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டை கெய்ரோவில் இவ்வருடம் அக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் கூட்டுவதென்று இன்று கூடிய நடுநிலைமை நாடுகளின் பூர்வாங்க மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

நடுநிலைமை நாடுகளின் மகாநாடு இன்று காலை ஜனப்பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் தொடர்ந்து நடைபெற்றது. நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாடு கெய்ரோவில் நடைபெற வேண்டுமென்று இலங்கை பிரேரிக்க இந்தியா அதை ஆமோதித்தது. இந்த மகாநாட்டுக்கு எந்தெந்த நாடுகளை அழைப்பதென்றும் இன்றைய கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பெல்கிரேட்டில் நடைபெற்ற முதலாவது நடுநிலைமை நாடுகள் மகாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளுடன், ஆபிரிக்க ஒற்றுமை மகாநாடு, அரபு உச்சி மகாநாடு ஆகியவற்றில் கலந்துகொண்ட நாடுகளையும் அழைப்பதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள வருமாறு, நயர்ஸலாந்து, வடரொடீஷியா, லாவோஸ், ஜமைக்கா, டிரினி

(6-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. ச. பஸ்சாரதிகள் மீது விசாரணை

நல்லூர், வியாழன்

யாழ் பாணத்திலுள்ள இ. போ. ச. பஸ் சாரதிகள், வான் சாரதிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று இ. போ. ச. மேலதிகாரிகளுக்குச் செய்யப்பட்ட புகார்களைத் தொடர்ந்து விரைவில் விசாரணை நடத்தப்படவிருக்கின்றது.

வடபகுதியிலுள்ள பல்வேறு துறைகளிலும் வான் சேவை அதிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் இ. போ. சபைக்கு மாதமொன்றுக்குப் பல ஆயிரம் ரூபாய் வருமானம் தடைப்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் ஜப்பான் நிபுணர்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையின் டெலிபோன் சேவையின் அபிவிருத்தி பற்றி ஆராயும்பொருட்டு இலங்கை அரசாங்கத்தினுல் வரவழைக்கப்பட்ட இரு ஜப்பானிய தபால் நிபுணர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்துள்ளனர். இவ்விரு நிபுணர்களும் தபால், தந்திப் போக்குவரத்து சுப்பிரிண்டன் திரு. வீ. எஸ். நல்லையாவுடன் யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரையும், புதிய தபாற்கந்தோரையும் சென்று பார்வையிட்டனர்.

இங்கு வந்துள்ள இவர்கள் அனுராதபுரம், பளை ஆகிய இடங்களிலுள்ள தபாற்கந்தோர்களையும் சென்று பார்வையிட்டனர். இவர்கள் இலங்கையில் 3 மாதகாலம் தங்கியிருப்பார்கள்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் தேர்த்திருவிழா காலை 10-30க்கு பஞ்சமூர்த்திகள் பூசை, பகல் 12-00க்கு பஞ்சரத ரோகணம், மாலை 5-00க்கு ரத அவரோகணம்.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
கருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

## மணிவாக்கு

தம் வாழ்க்கையிலே ஒவ்வொரு துறையிலும் தெய்வத்தைத் தம்முடன் பேச அனுமதிப்பவர்கள் உலகத்தையே புதிதாக ஆக்கக்கூடியவர்களாவார்கள்.

—ஜார்ஜ் வெஸ்ட்

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

சோபகிருது ஆண்டு
பங்குனி 13 (26-3-64)

## பார்லிமெண்டைக் கூட்டுக

இலங்கை அரசியல் அரங்கில் ஒரே குழப்பமாகவிருக்கிறது. என்ன நடைபெறுகிறதென்பதை பொதுமக்கள் தெரிந்துகொள்ள முடியாமலுள்ளது. இதே சமயம் சர்வாதிகார ஆட்சி பற்றி பொறுப்புள்ளவர்கள் கூட அடிக்கடி பேசிவருகின்றனர். ஜனநாயக ஆட்சி அமைப்பு முறையைச் சிதைக்கும் எந்த முயற்சிக்கும் உடந்தையாக இருக்கும் உத்தேசம் தமக்கு இல்லையென்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவருக்கு உறுதியளித்துள்ள போதிலும் சர்வாதிகாரம் பற்றிய பேச்சு ஓயவில்லை.

பிரதமர் தமக்கு உறுதியளித்திருந்தபோதிலும் சில எதிர்கட்சிக் அங்கத்தவர்களையும் தம்மையும் தடுப்புக் காவலில் வைக்கவும், சர்வாதிகார ஆட்சியை அமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் இதுவுமொன்று என எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. கவர்னர் ஜெனரலை இரண்டு தடவைகள் சந்தித்திருப்பதுடன் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் திரு. டட்லி சேனநாயகா சந்தித்துப் பேசியிருக்கிறார். இந்தச் சந்திப்புக்களிலிருந்தும் அரசாங்கக் கட்சியில் செல்வாக்குள்ளவரும் சர்வாதிகார ஆட்சி பற்றி முன்னரே அபிப்பிராயம் தெரிவித்துவந்துள்ளவருமான ஞானசீகதேரோ கவர்னர் ஜெனரலுக்கு எழுதிய கடிதமும் அரசியல் அரங்கில் ஏதோ நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்ற அச்சத்தையும் ஐயத்தையும் மக்கள் மனதில் ஏற்படுத்துவது இயல்பு.

முன்பு மந்திரி பதவி வகித்தவரும் அரசாங்கத்தில் மீண்டும் சேரக்கூடுமெனக் கருதப்பட்டவரும் ஒரு அரசியல் கட்சியின் தலைவருமான திரு. பிலிப் குணவர்த்தனவும் 'சர்வாதிகார' பொறுப்பை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாக பகிரங்கமாக ஒரு பொதுக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். இவைகளையெல்லாம் 'வீண் பேச்சு' என்று அசட்டை செய்துவிடக்கூடிய சூழ்நிலை இப்பொழுது நிலவவில்லை.

ஜனநாயகத்தின் தலையாய சின்னம் 'பாராளுமன்றம்'. நாட்டின் நிலையை அரசாங்கமும் அரசாங்கத்தின் செயல் திட்டங்களை மக்களும் அறிந்துகொள்வது பாராளுமன்றத்தின் மூலம் தான். தங்கள் பொன்னான வாக்குகளை அளித்து தாங்கள் தெரிந்து அனுப்பிய பிரதிநிதிகள் வாயிருந்தும் ஊமையராய், கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய் இன்று இருக்க வேண்டிய நிலையை அறிந்து மக்கள் கவலையுறுகின்றனர். பாராளுமன்றக் கூட்டத்தொடர் கலைக்கப்பட்டதுமன்றி அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்ததும், அவசரகால நிலைமையின் போது சர்வாதிகாரம் பற்றிப் பேசப்படுவதும் ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய இந்நாட்டு மக்களுக்கு கவலையும் அச்சமும் ஏற்படுத்துவது இயற்கை.

அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகள் கூட உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியாதிருப்பதால் அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தை கூட்டவேண்டுமெனக் கோரியுள்ளனர்

நிலைமையைத் தெளிவுபடுத்தி பிரதமர் மினுவாங்கொடையில் ஒரு அறிக்கை விடுவாரென எதிர்பார்க்கப்பட்டது. 'அவசர அலுவல்' காரணமாக அதுவும் நடைபெறவில்லை.

நிதி நெருக்கடி, வாழ்க்கைச் செலவு உயர்வு, அத்தியாவசிய பொருள்களின் பற்றாக்குறை ஆகியவைகள் ஒருபுறமிருக்க சுதந்திரமே பறிபோய்விடுமோவென்ற பீதி மக்களிடம் ஏற்பட்டுவிட்டது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது பிரதமருடைய கடமையும் பொறுப்புமாகும். பாராளுமன்றக் கூட்டத்தை விரைவில் கூட்டுவதுதான் இதற்கெல்லாம் ஒரே வழி.

# சமயமும் விஞ்ஞானமும்

— (கா. இராமநாதன்) —

**யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தென்னிந்திய சைவசித்தாந்த சமாஜத் தலைவர் திரு. கா. இராமநாதன் இங்கு நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் சாரம் கட்டுரையாக வெளியிடப்படுகிறது.**

இன்று விஞ்ஞானத்தை உலகம் வரவேற்கின்றது. விஞ்ஞானத்தில் நல்ல பற்று வைத்திருக்கின்றது. விஞ்ஞானத்திற்கு அளவுகடந்த மதிப்பு அளிக்கிறது. பரந்த ஆகாயத்தையும் காற்றையும் வெளிச்சத்தையும் விஞ்ஞானம் ஆராய்கின்றது. ஐம்பெரும் பூதங்களையும் விஞ்ஞானம் ஏவல் கொள்ளுகின்றது. திருமண விழா விஞ்ஞானத்தின் உதவியால் உன்னதமாக நடைபெறுகின்றது. வாழ்வதற்கு விஞ்ஞானம் கைகொடுக்கின்றது. இறந்தவனைத் தகனஞ் செய்வதற்கும் விஞ்ஞானம் தான் உதவிபுரிகின்றது. பல் இல்லாதவனுக்குப் பல்லையும் கண்ணில்லாதவனுக்கு கண்ணையும் காலில்லாதவனுக்குக் காலையுங் கொடுக்கும் விஞ்ஞானத்தின் முன்னர் சமயம் எதிர்நிற்க முடியாது என்று எண்ணக்கூடிய அளவுக்குவிஞ்ஞானம் வாழ்க்கையோடு கலந்திருக்கின்றது.

விஞ்ஞானியிடம் காதலைப் பற்றிப் பேசுவோமாயின் அவன் அதை 'டெஸ்ரியூப்'புக்குள்ளே போட முடியாது என்பான். அதனால் காதல் இல்லை; அன்பு இல்லை என்று நாம் சொல்லிவிட முடியுமா? விஞ்ஞானியிடம் கடவுளைபபற்றிப் பேசுவோமாயின் காலம், இடம் என்பவற்றுக்கு அகப்பட்ட பொருளை ஆராயப்படுவனதவின்-கடவுள் என்று ஒரு பொருளில்லை என்பான். 'நானுர்' என்ருல் விஞ்ஞானி விழிப்பான். 'நீயார்' என்ருல் தன்பெயரைச் சொல்லுவான். அப்பெயர் அவனுடைய உடலுக்கு இட்டபெயர். அவனுடைய தோலும் உடம்பும் அவனுகான்: அவனுக்கு ஆன்மாவைப்பற்றி ஒன்றுமே தெரியாது. 'நாம் ஏன் பிறந்தோம்' என்று விஞ்ஞானியை வினவுவோமாயின் அப்பா அம்மாவிடம்தான் கேட்க வேண்டுமென்பான்.

"நானுர் என்னுள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்"என்பவற்றை அறியான் விஞ்ஞானி. வையத்து வாழ் வாங்குவாழ்வதற்கு உயர்ந்த இலட்சியமும் அறியான். விஞ்ஞானகூடத்திலே ஆராய முடியாத பொருள்களை விஞ்ஞானி எவ்வாறு அறிவான். விஞ்ஞானகூடத்திலே ஆராய முடியாத உயர்ந்த பொருள்களை ஆராய்வது தான் சமயம், விஞ்ஞானம் சூழலில் உள்ள பொருள்களுக்குக் கட்டுப்பட்டது. சூழலைக் கடந்தது சமயம். விஞ்ஞானம் சூழலை வாழ்வுக்கு ஏற்றதாக ஆக்குவது உண்மை. விஞ்ஞானத்தின் உதவியுடன் இலட்சிய வாழ்வு வாழ்வதற்குச் சமயம் உதவுகிறது. கிராம வாழ்விலே விஞ்ஞானம் கலவாத பூரண இலட்சிய வாழ்வை வாழ்கின்றூர்கள். நல்லவர் தீயவர் என்பது ஒருவரது மனநலனைக் கொண்டுதான் கணிக்கப்படுகிறது. எனவே இலட்சிய வாழ்வுக்குச் சமயம் உதவி புரிகின்ற அளவுக்கு விஞ்ஞானம் உதவிபுரியவில்லை.

சைவசமயத்திலே பதி, பசு, பாசம் என்ற மு பொருள்களும் ஆராயப்படுகின்றன. விஞ்ஞானம் பதியை-கடவுளை ஆராய்வதில்லை. நான்குமாற் பசுக்களை ஆராயும் விஞ்ஞானம் உண்மைப் பசுவை-ஆன்மாவை ஆராயவில்லை. பாசம் மூன்று வகைப்படும். அவற்றுள் ஆணவம், கன்மம் ஆகிய இரண்டையும் விஞ்ஞானம் ஆராய்வதில்லை. பாசபொருள் சூக்குமம் தூலம் என இரு வகையின. அவற்றுள் சூக்குமத்தைவிட்டுத் தூலப் பொருள்களைத்தான் விஞ்ஞானம் ஆராய்கிறது. கணக்குப் பார்த்தால் பதி,பசு, பாசமாய மூன்றில் ஒன்று பாசம். ஆணவம், கன்மம், மாயை ஆகிய பாசத்தின மூன்றில் ஒன்று மாயை. (சூக்குமம் தூலமாய மாயைவடிவு இரண்டில் ஒன்ருய தூலப் பொருளையே விஞ்ஞானம் ஆராய்கிறது கணக்குப் பார்த்தால் விஞ்ஞானம் முழுப் பொருளின் பதினெட்டில் ஒன்றைத்தான் ஆராய்கிறது. ஆனுல் சமயமோ விஞ்ஞானம் ஆராயும் அதனோடு பதினெட்டில் பதினேழையுஞ் சேர்ந்தாராய்கிறது. எனவே சமயந்தான் முழுப்பொருளையும் ஆராய்கின்றது. விஞ்ஞானம் முழுப்பொருளை பதினெட்டாகப் பகிர்ந்ததில் ஒரு பங்கையே ஆராய்கின்றது.

சமயம் முழுப் பொருளாகப் பார்த்து மகிழும். விஞ்ஞானம் அதனை உபகுதிகளை பிரித்துப் பரிசோதித்துப் பார்க்கும். சமயி பூமாலையைக் கடவுளுக்குச் சூட்டி மகிழுவான். விஞ்ஞானி ஒவ்வொரு பூவாகப் பிடுங்கி ஆராய்வான. இராமச்சந்திரனது முடிசூட்டுவிழாவில் இராமன் அநுமனைத் தவிர அனைவர்க்கும் பரிசில் வழங்கினுன். அதனைப் பார்த்த சீதை தனது முத்தாரத்தைக் கழற்றி அநுமனுக்குப் பரிசாக வழங்கினுள். அதனைப் பெற்ற அநுமன் பக்கத்திலிருந்த ஆசனத்திலிருந்து ஒவ்வொரு முத்தாகப் பிரித்தெடுத்து உடைத்துப் பார்த்தவண்ணமாகஇருந்தானும். ஏனிவ்வாறு செய்கிருய் என்று கேட்டபோது "முத்துக்குள்ளே இராமன் இருக்கிருனே என்று பார்க்கிறேன்" என்ருனும். இவ்வாறே விஞ்ஞானிகள் தனித்தனிப் பொருள்களை ஆராய்கின்றூர்கள். ஆராயும் கணிய அளவு பரிமாணத்தைப் பார்க்கும்போது விஞ்ஞானம் மிகக் குறைந்த அளவையே ஆராய்கின்றது. சமயமோ முழுப் பொருள்களையும் ஆராய்கின்றது. ஆராயும் பொருள்களின் தன்மையிலும் வித்தியாசமுண்டு. விஞ்ஞானம் உயிரற்ற பொருள்களையே செத்த பொருள்களையே ஆராய்கிறது. அழியுந் தன்மையுள்ளபொருள்களை விஞ்ஞானம் ஆராய்கின்றது. கண்ணுற் காணும் பொருள்களெல்லாம் அழியும் என ஒரு நூலிலே கூறுகின்றூர் ஐன்ஸ்ரீன். உயிருள்ளவற்றை உயிரை ஆராய்கிறது சமயம். உணர்ச்சி, மகிழ்ச்சி, ஆறுதல், உயர்ந்த இலட்சியம் இவற்றை ஆராய்வது சமயம். அழியாதவற்றை ஆராயும் சமயத்தின் முன்னர் விஞ்ஞானம் எதிர்நிற்க முடியாது. விஞ்ஞானம் அளவுகடந்த வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளிலே மனக்குழப்பம்-பைத்தியம் அதிகரித்திருப்பதாக அறிக்கைகள்மூலம் அறிகின்ரோம். கடவுளது பாதத்தை இடைவிடாது சிந்திப்பவர்களுக்கே மனக்கவலை தீரும். இதனை வள்ளுவர்,

"தனக்குவமை யில்லா தான் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது"

என்று கூறுகின்றூர்.

விஞ்ஞானம் வாழ்க்கைக்கு வேண்டியதே. விஞ்ஞானம் வளரும் வேகத்திற்கு ஏற்பச் சமயம் வளரவில்லை. குதிரை வளரும் வேகத்திற்கு ஏற்பக் குதிரையிற் சவாரி செய்பவனும் வளர வேண்டும். இன்றேல் குதிரை அவனில் ஏறிவிடும் இவ்வாறே சமய வளர்ச்சி குன்றியமையால் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்தைத் தாழ்த்திவிடப் பார்க்கின்றது. சமயத்தை வளர்த்து உண்மை நிலையை அடையச் செய்ய வேண்டியது சமய நன்மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

## ஆஸ்பத்திரி . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி

டாக்டர் அவ்விடம் தோன்றினர்.

இந்த வார்ட்டை பார்வையிட காலை 10-30 மணிக்கு வந்த டாக்டர்களும், இப்புதிய நோயாளியிடம் கவனம் செலுத்தவில்லை. இந்த வார்ட்டில் காலை 8 மணி முதல் கடமையாற்றிய நர்சு காலஞ்சென்றவரை 9-30 மணிக்கே கண்டதாக கூறியுள்ளார். 45 நிமிடங்கள் இந்த நர்சு என்ன செய்தார் என்பதும், தள்ளு வண்டியில் கொண்டுவரப்பட்ட நோயாளியைதான் காணவில்லை என்பதும் அந்த நர்சு விளங்கப்படுத்தவேண்டிய விஷயம்.

நோயாளி ஒருவரை பரிசோதிப்பதற்காக இந்த வார்ட்டிற்கு காலை 11-30 மணிக்கு வந்த டாக்டர் துரதிருஷ்டமான இந்த நோயாளியையும் வேறு சிலரையும் பரிசோதிக்க மறுத்துவிட்டார். காலஞ்சென்ற இந்த நோயாளியைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும், நர்சு மூலமும் இந்த டாக்டருக்கு தெரிவிக்கப்பட்டும், அவர் பரிசோதிக்க மறுத்துவிட்டார்.

## ஐயாறன் எழுதுவது

இதுவரை யாழ்ப்பாணம் இவ்வித காட்சியைக் கண்டதில்லை. இனிக் காணப்போவதுமில்லை. என்றிவ்வாறு நேற்று யாழ்ப்பாண முனிவரின் இறுதி தெய்வீக யாத்திரை வைபவங்களைக் கண்ட ஒரு வயோதிப அன்பர் அவரையும் அறியாமல் வாய்விட்டுச் சொன்னர்.

கொழும்புத்துறை ஆசிரமத்திலிருந்து புனித யாத்திரை ஆரம்பமானபோது பல தாய்மார்களும் அன்பர்களும் கண்ணீர் தாரைதாரையாக விட்டுக் கலங்கி நின்றதைக் கண்டேன். கல்மனதையும் கரைக்கக்கூடிய காட்சி அது.

இவ்வளவு காலமாக அவரைத் தம் வீட்டிலே வைத்து தெய்வம்போல் பேணி வந்த அன்பர் புனித சடலம் அவ் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது 'சிவசிவா' 'சிவசிவா' என்று கதறினர். வழிநெடுக ஒவ்வொரு வீட்டிலும் குத்துவிளக்கு வாழை தோரணங்கள், தீபாராதனை, புஷ்பாஞ்சலி எல்லாம் பக்தியுடன் நடைபெற்றன.

கதிர்காமம், நல்லூர் திருவிழாபோல் முன்புறம் பல கற்பூரச் சட்டிகளில், கற்பூர ஜோதி எரிந்துகொண்டிருந்தது. தாய்மார்களும் அன்பர்களும் சிவபுராணம், நற்சிந்தனைப் பாடல்களை கோஷ்டி கோஷ்டியாகப் பாடிக்கொண்டு வந்தனர்.

* * *

கொழும்பிலிருந்து வந்த மெயில்வண்டி மூன்று மணி நேரம் தாமதம். காலை 8 மணிக்கு ஊர்வலம் புறப்படுவதாகவும் 9 மணிககு ஜோதியில் கலக்கும் வைபவமுமென்று குறித்திருந்தனர். ரயில் தாமதமானதால் புனித உருவத்தைப் பார்க்க முடியாது போகுமோ என்று ரயிலில் பல இடங்களிலிருந்தும் ஆவலுடன் வந்தவர்களுக்குக் கவலை. நல்லவேளையாக புனிதசடலத்தையாவது சுலபமாகச் தரிசிக்கும் வண்ணம் புஷ்பங்களால் அலங்கரித்து வைத்திருந்ததால் ரயிலிலிருந்து நேரே கொழும்புத்துறைக்கு வந்து முனிவரின் புனித சடலத்தை நன்கு தரிசித்ததுடன் ஊர்வலத்திலும் கலந்துகொண்டார்கள்.

யாழ்ப்பாணத்திலே சாதாரணமாகத் தாய்மார்கள் மயான ஊர்வலத்தில் கலந்து கொள்வதில்லை. ஆனல் நேற்று நடந்த தெய்வீக யாத்திரையில் தாய்மார்கள் கூட்டமே அதிகம். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், அரசாங்க அதிபர்கள், டாக்டர்கள். அப்புக்காத்துகள்பிரமுகர்கள்முதலியவர்களை அவர்களதுமனைவிமார்களை அழைத்துவந்திருந்தனர்; யாழ்ப்பாணத்திலேஅல்லஈழத்திலுள்ள தமிழ் சமூகத்திலேயுள்ள சிறந்தவர்களில் பெரும்பாலோரையும் அங்கு காணக்கூடியதாக இருந்தது. அவ்வளவுஉள்ளங்களையும் அந்தப் மகான் எப்படித்தான் கவர்ந்தாரோ!

தங்கள் ஞானத்தந்தையாகவும் குடும்பப் பெரியாராகவும் கருதி அவரையே நம்பி வந்தவர்கள் பலர். அவர்கள் முகத்திலே எவ்வளவு கவலையும் துயரமும் தெரியுமா?

கற்பூரஜோதியிலே அந்தப் புனித உடல் கலந்தபோது அவர்களெல்லாம் அடக்கமுடியாத துக்கத்துடன் கண் கலங்கி நின்றனர். பல பல மதத்தவரும் பல பல சாதியினரும் அங்கு கூடி நின்று அஞ்சலி செலுத்திய அந்தத் தெய்வீகக் காட்சி என்றும் மறக்கமுடியாததாகும்.

* * *

பிறவாதும் இறவாதும்
பெருகினனைப்
பேய்பாட நடமாடும்
பித்தன் தன்னை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

மறவாத மனத்தகத்து
மன்னினனை
மலையானைக் கடலானை
வனத்துளானை
உறவானைப் பகையானை
உயிரானனை
உள்ளானைப் புறத்தானை
ஓசையானை
நறவாடும் பூங்கொன்றை
சூடினனை
நாரையூர் நன்னகரிற்
கண்டேன் நானே

—திருநாவுக்கரசர்

# "திருவள்ளுவரைப்போன்ற சமதர்மவாதி உண்டோ"

## உருவப்படத் திறப்பு விழாவில் உபஜனாதிபதி பாராட்டு

சென்னை, மார்ச் 25

"ஒழுங்கு, பண்பாடு, உழைப்பு ஆகியவற்றை விரும்பும் ஒவ்வொருவரையுமே தமிழ்நாடு கவருகிறது. இந்தியாவின் முன்னணி ராஜ்யங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குவதற்கு அன்றாட வாழ்வில் இந்தியப் பண்பாட்டை அவர்கள் பிரதிபலிப்பதே காரணம். இப்பண்புக்குத் திருக்குறள் தான் காரணம் என்பதை அதை மேலோட்டமாகப் படித்துப் பார்த்தபின் உணர்ந்தேன்" என உபராஷ்டிரபதி டாக்டர் ஸகிர்ஹுஸெய்ன் சென்னை அசெம்பிளி மண்டபத்தில் வள்ளுவர் உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

"தமிழ் இலக்கியங்கள் சிலவற்றின் மொழி பெயர்ப்புக்களை நான் பார்த்தேன். பண்டைத் தமிழ் மக்கள் வளமான வாழ்வு பெற்றிருந்தனர் என்பதையும், தன்னிகரில்லாத இலக்கியங்களைப் படைத்துள்ளனர் என்பதையும் கண்டேன். திருவள்ளுவரின் மகத்தான படைப்பாகிய திருக்குறளின் மொழி பெயர்ப்பைப் படித்துப் பார்த்தேன், அப்போது எனக்கு வருத்தமே ஏற்பட்டது. திருக்குறளின் மூலநூலைப் படித்து அனுபவிக்க பண்டைப் பெருமொழியான தமிழைக் கற்காமல் போனேனே என்பது தான் வருத்தத்துக்குக் காரணம்" என்றும் உபராஷ்டிரபதி கூறினார்.

"திருவள்ளுவர் குறித்தும் திருக்குறள் குறித்தும் நான் மட்டற்ற பெருமை அடைகிறேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு. திருவள்ளுவர் இந்தியப் பண்பாட்டின் ஒளிவிளக்காகத் திகழ்கிறார். அவரது லட்சியம், தத்துவம், நெறிமுறைகள், ஆகியன உலகம் முழுவதற்கும் பொருந்தும். அவை இந்தியப் பண்பாட்டில் இரண்டறக் கலந்து மக்களின் பொது கலாச்சாரப் பண்பாட்டில் ஒரு அம்சமாக ஆகிவிட்டன.

ஜனநாயக சோஷலிஸம் நமது லட்சியம். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதும், செல்வத்தைச் சமசீராக விநியோகிக்கவும் திட்டமிடுகிறோம் சோஷலிஸம் என்பது தற்காலத்தில் தான் தோன்றியது என நம்பிப் பலர் எண்ணுகிறோம். ஆனால் கிறிஸ்துபிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே, செல்வத்தைப்பெருக்குவதிலும் செல்வ வசதிகளைப் பாதுகாப்பதிலும் அரசினுடைய கடமைகளை எடுத்துக் கூறியிருக்கிறார் வள்ளுவர். நாட்டுப் பாதுகாப்பு, செல்வத்தைச் சீராகப் பங்கிடுதல் ஆகியவை பற்றியும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தத் தமிழ் ஞானியைப் போன்ற சமதர்மவாதி வேறு ஒருவரும் இல்லை.

மொழி பெயர்ப்புக்களின் மூலமாகத்தான் திருவள்ளுவரை நான் அறிய முடிந்தது. அந்த அளவிலேயே யுகயுகத்திற்குத் தோன்றும் மகான்களில் ஒருவர் திருவள்ளுவர் என என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும். அன்றாட வாழ்க்கையில் சதா போராடிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு அனுபவ மொழிகளால் தைரியம் ஊட்டுவதோடு, எண்ணத்திலும் வாழ்க்கை நெறியிலும் அவன் உயர ஒப்பற்ற வழிகாட்டிகளாகவும் விளங்கிய ஞானிகளில் திருவள்ளுவர் குறிப்பிடத் தக்கவர்" என்றும் டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் குறிப்பிட்டார். மண்டபத்தில் மகாத்மா காந்தியின் படம் சபாநாயகருக்கு மேலும், திருவள்ளுவரின் படம் எதிர்ப்புறத்திலும், ராஜாஜியின்படம் வலதுபுறத்திலும் உள்ளது.

வள்ளுவர் படம் வரைந்த ஸ்ரீ வேணு கோபாலசர்மாவுக்கு உபஜனாதிபதி பொன்னாடை போர்த்தினார்.

ஆரம்பத்தில் உப-ராஷ்டிரபதியை கவர்னர் ஸ்ரீ மேதி, மேல்சபைத் தலைவர் டாக்டர் செரியன், சபாநாயகர் செல்லபாண்டியன், முதல் மந்திரி திரு பக்தவத்சலம் ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வந்தனர் மத்திய கர்னாடக இசைக் கல்லூரி மாணவர்கள் திருக்குறளிலிருந்து இறைவணக்கப் பாட்டுக்களை இசைத்தனர்.

முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் அதற்கு முன் நிகழ்த்திய வரவேற்புரையில் 33 மொழிகளில் குறள் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாய்க் கூறி, போப்பய்யரின் ஆங்கிலமொழி பெயர்ப்பு உலகுக்கெல்லாம் திருக்குறளின் பெருமையையும், தமிழ்நாட்டுப பண்பாட்டின் பெருமையையும் விளங்கச் செய்தது என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு நெடுஞ்செழியன் போப்பய்யரின் ஆங்கிலத் திருக்குறள் ஒன்றை உப-ராஷ்டிரபதிக்கு அன்பளிப்புச் செய்தார்.

## ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யார் பிறந்தநாள்

காஞ்சிபுரம், மார்ச் 25

ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யா சுவாமிகளின் 71-வது பிறந்ததினவிழா மே மாத கடைசி வாரத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்விழா 10 தினங்களுக்குக் கோலாகலமாகக் கொண்டாடப்படும்.

## அடிஸ் அபாபா நாடுகள்பங்குபற்றும்

கொழும்பு, புதன்

1961-ம் ஆண்டு பெல்கிரேட் மண்டலசார்பற்ற மகாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளும் சமீபத்தில் அடிஸ் அபாபா மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளும் அடுத்து நடைபெறவிருக்கும் மண்டலசார்பற்ற உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என மண்டல சார்பற்ற தூதர்கள் மகாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப் பட்டதாயும், இவை தவிர வேறு எந்தெந்த நாடுகள் கலந்து கொள்வதென்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு உபகுழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## இந்தியாவினல் ஆபத்தாம்

ராவல்பிண்டி, மார்ச் 25

எப்போதும் உஷாராக இருக்குமாறும், இந்தியாவின் ராணுவ அபாயத்தைச் சமாளிக்க புதிய போர் முறைகளை வளர்க்குமாறும் தன் தேசத் துருப்புக்களை பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் கேட்டுக் கொண்டார். அப்போது அவருடன் ஈராக் அதிபர் அரீபும் இருந்தார்.

பாகிஸ்தானிடம், இந்தியா நிரந்தரப்பகைமை கொண்டிருப்பதாயும், பாகிஸ்தானுக்கு இந்தியாவால் அபாயம் அதிகரித்திருப்பதாயும் அயூப் கூறினார்.

பகைவனின் நெஞ்சைத் தாக்குவதற்கு போர்ப்படையைத் தயாராய் வைத்திருக்குமாறு முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்ளும் புனித குர்ஆன் வாசகம் கூட்டத்தில் படிக்கப்பட்டது.

## அயூப்பின் பதில்

புதுடில்லி, மார்ச் 25

பிரதம மந்திரி திரு. நேரு ஜனாதிபதி அயூப்கானுக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் எதிர்பார்க்கப்படுவதாய் திரு லால் பகதூர் சாஸ்திரி கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நடத்தப்படும் விஷயம் மிக வேதனையளித்த போதிலும், இந்தியர்கள் இவ்விதச் செயலில் இறங்கக்கூடாது என அவர் தெரிவித்தார்.

## உ.பி. அரசியலமைப்பு நெருக்கடி

லக்ஷ்மணபுரி, மார்ச் 25

உத்தரபிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சட்ட நெருக்கடியைத் தீர்க்க ராஜ்யத்தின் சகல அரசியல் கட்சிகளும் நேற்றுக்கூடி ஆலோசனை நடத்தின. பரிகாரம் ஒன்று கூறப்பட்டிருப்பதாயும், இவை அனைவருக்கும் திருப்தியளிக்கத்தக்கவகையில் இருக்கும் எனக் கருதுவதாயும் கூறப்பட்டது. இதற்கிடையில் மத்திய மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி, அட்டோர்ணி ஜெனரலுடன் இது சம்பந்தமாக ஆலோசனை நடத்தினர்.

# மந்திரிகளைக் கொல்ல பாக். ஒற்றர் முயற்சி?

கல்கத்தா, மார்ச் 25

சிலமந்திரிகளைக் கொலை செய்யவும், ராணுவ ரகசியங்களைச் சேகரிக்கவும் இந்தியர்களைத் திரட்ட 3 பாகிஸ்தானி ஒற்றர்கள் முயற்சி செய்தது பற்றிய பரபரப்பான தகவலை கல்கத்தா பொலிசார் வெளியிட்டனர்.

8 மாதகால புலன்விசாரணைக்குப்பின் அவர்கள்மீது பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் முன்பு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

முதல்எதிரி அஜிசுல் இஸ்லாம் கடந்த ஆகஸ்டில் கைது செய்யப்பட்டார். அரை டஜன் புனைபெயர்களுடன் இவர் 1958 முதல் 1963ம்ஆண்டுவரை ஒற்றர் வேலையில் ஈடுபட்டார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தொடர்புகளை ஏற்படுத்தினர். மற்ற எதிரிகள் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த பருகி, பிகானிரைச் சேர்ந்த சம்பலால்மாம்.

## அருப்புக்கோட்டை உபதேர்தல்

மதுரை, மார்ச் 25

லோகசபையின் அருப்புக்கோட்டை தொகுதிக்கான உபதேர்தலில் 4 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். ஏப்ரல் மாதம் 15-ந் திகதி வாக்குப் பதிவு நடைபெறும். 16-ந் திகதி வாக்குகள் எண்ணப்படும். தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ், இம்மாத இறுதியில் அருப்புக்கோட்டைத் தொகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

## சௌத்ரி

கெய்ரோ, மார்ச். 25

இந்திய சேனாதிபதி ஜெனரல் சௌத்ரி நேற்று கெய்ரோவிலிருந்து காஸாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு இந்தியத் துருப்புக்களை அவர் பார்வையிடுவார்.

ஐ. அ. குடியரசு

## அலிசாப்ரி மந்திரிசபை நிறுவுவார்

கெய்ரோ, மார்ச். 25

ஜனாதிபதி நாஸர் திரு. அலிசாப்ரியை புதிய மந்திரிசபை நிறுவுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார். இன்று புதிய மந்திரிசபை பதவி ஏற்கும் என அறிவிக்கப்படுகிறது.

பீல்ட்மார்ஷல் அப்துல் அமீர் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## ரஷ்யாவுக்கு இந்தியா ஆதரவு

ஜெனிவா, மார்ச் 25

ஜெனிவா ஆயுதப் பரிகரண மகாநாட்டில் அணு ஆயுத ஒழிப்பு சம்பந்தமான ரஷ்யாவின் யோசனைகளை இந்தியா ஆதரித்திருக்கிறது ரஷ்யாவின் யோசனை ஆயுதப் பரிகரணத்தில் முக்கிய முன்னேற்றம் ஏற்படுத்துவதாய் இருப்பதாக இந்திய பிரதிநிதி திரு. திரிவேதி கூறினார்.

இந்தியாவின் ஆதரவுக்கு ரஷ்ய பிரதிநிதி திரு. ஸராப்கின் வரவேற்பு தெரிவித்தார்.

அமெரிக்கப் பிரதிநிதி பேசியபோது ரஷ்ய யோசனையை அமுலில் வைத்திருப்பதாயும், ஆனால் சமபல ஆயுதப் பரிகரணத்துக்கு இது வழி வகுக்கவில்லையென்றும் கூறினார்.

## ஸ்ரீமதி பண்டிட்

ஆமத்நகர், மார்ச் 25

1942-ம் ஆண்டு திரு. நேரு ஆமத்நகர் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது, அவருக்குப் பணிவிடையாளராக இருந்தரகு துக்காராமுடன் மகாராஷ்டிர கவர்னர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் போட்டோ எடுத்துக்கொண்டார்.

துக்காராம் இப்போது ஒரு விவசாயியாக இருக்கிறார் மகாராஷ்டிர அரசாங்கம் அவருக்கு 12 ஏக்கர் நிலம் அளித்திருக்கிறது.

திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த துக்காராம் பின்னர் ஆமத்நகர் கோட்டைக்கு மாற்றப்பட்டார். அங்கு நேருவுக்குப் பணிவிடையாளராயிருந்தார்.

## நேபா, லடாக்கில் 1381 பேர் பலி

புதுடில்லி, மார்ச் 25

நேபாவிலும், லடாக்கிலும் சீனர்களுக்கெதிராக நடைபெற்ற போரில் 1381 பேர் கொல்லப்பட்டனர் என்றும், விமானப்படையைச் சேர்ந்த ஒரு நபர் உட்பட 1699 பேர் காணப்படவில்லை யென்றும், காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 1047 என்றும் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் பேசுகையில் கூறினார்.

## எம். எஸ். உதவிக் கச்சேரி

புதுடில்லி, மார்ச் 25

டில்லியிலுள்ள மதராஸி கல்விச் சங்க கட்டிட நிதி உதவிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் முன்னிலையில் ஓர் உதவிக் கச்சேரி செய்தார்.

## ஸி. பி. உருவப்படம்

திருவனந்தபுரம், மார்ச் 25

கேரள சர்வகலாசாலை பட்டமளிப்புவிழா மண்டபத்தில் மாஜி உபஅத்தியட்சகர்களான டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் உருவப்படத்தைப் பேராசிரியர் ஸாமுவேல் மத்தாய் திறந்து வைத்தார்.

## காமன்வெல்த் பிரதமர் மகாநாடு

லண்டன், மார்ச். 25

காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாடு ஒன்றை விரைவில் நடத்துவது பற்றி தாம் கூடிய சீக்கிரம் அறிக்கை விடப்போவதாக பிரிட்டிஷ் பிரதமர் சர் ஹியூம் தெரிவித்தார். அநேகமாக ஜூலை மாதத்தில் இம் மகாநாடு நடைபெறலாம் எனத் தெரிகிறது.

## மத்தியஸ்தர் ஏற்கப்பட்டார்

லண்டன், மார்ச். 25

சுவிடனிலுள்ள பின்லாந்து ஸ்தானிகர், சைப்ரஸில் ஐ.நா. மத்தியஸ்தராக நியமிக்கப்பட வேண்டுமென்ற யூதாண்டின் யோசனையை பிரிட்டன், கிரீஸ், துருக்கி, சைப்ரஸ் ஆகிய 4 நாடுகளும் வரவேற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## அரீப் டில்லி வருகிறார்

புதுடில்லி, மார்ச் 25

ஈராக் அதிபர் பீல்ட் மார்ஷல் அரீப் நாளை புதுடில்லி வருகிறார். இந்தியாவில் அவர் 7 நாள் சுற்றுப்பிரயாணஞ் செய்வார்.

## உபஜனாதிபதி

புதுடில்லி, மார்ச் 25

இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் லட்சத்தீவுகளுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## அமெரிக்க தூதர் சுடப்பட்டார்

டோக்கியோ, மார்ச் 25

ஜப்பானிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர், தனது அலுவலகத்திலிருந்து வெளிவந்தபோது காலில் சுடப்பட்டார். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவரது நிலை அபாயகரமாய் இல்லைஎன அறிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக ஒரு ஜப்பானிய இளைஞன் கைது செய்யப்பட்டிருக்கிறான்.

## உலகயுத்தம் அசாத்யம

வாஷிங்டன். மார்ச் 25

இந்த அணுயுகத்தில் உலக யுத்தம் ஒன்று அசாத்தியம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

## தென் ரொடீஷியா

நியூயோர்க், மார்ச் 25

தென் ரொடீஷிய மக்களின் சட்டபூர்வமான லட்சியங்களுக்கு ஆதரவளிப்பதாக இந்தியா, போலந்து, டூனிஸியா, ரஷ்யா, ஆகியநாடுகள் ஐ.நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டுக்கு அறிவித்திருக்கின்றன.

## வானொலியில் நேரு பேச்சு

புதுடில்லி, மார்ச் 26

இந்தியப் பிரதமர் நேரு இன்றிரவு 8-30 மணிக்கு நாட்டு மக்களுக்கு ரேடியோ மூலம் சொற்பொழிவாற்றுவார். அகில இந்தியரேடியோவின் சகல நிலையங்களும் இதை அஞ்சல்செய்யும்.

## எகிப்தில் எண்ணைக் கம்பெனி தேசியம்

கெய்ரோ, மார்ச் 25

ஐக்கிய அராபியக் குடியரசிலுள்ள ஆங்கிலோ அமெரிக்க எண்ணை கம்பெனிகளை தேசியமயமயமாக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி நாஸர் வெளியிட்டிருக்கிறார்.

## 'ஈழகேசரி' பொன்னையா நினைவுவிழா

யாழ்ப்பாணம், புதன்

'ஈழகேசரி' பொன்னையா நினைவுவிழா குரும்பசிட்டி சன்மார்க்கசபை ஆதரவில் பங்குனி 15 உ (28-3-64) சனிக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் சபையின் மண்டபத்தில் நடைபெறும். அன்றைய காலை நிகழ்ச்சியாக சபையின் உப தலைவர் திரு. கா. சிவசாமி தலைமையில் நடைபெறும் பொன்னையா ஞாபகார்த்த பேச்சுப்போட்டியை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைப்பார். பிற்பகல் வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. தி.முருகேசம்பிள்ளை தலைமையில் பரிசளிப்புவிழாவும், பேச்சுப்போட்டியில் தங்கப் பதக்கம் பரிசுபெற்றவர்களின் சொற்பொழிவுகளும் நடைபெறும். அதன்பின் சன்மார்க்கசபையின் போஷகரும் தாபக அங்கத்தவருமான காலஞ்சென்ற திரு. கே. அப்பாக்குட்டி அவர்களின் உருவப்படத் திறப்புவிழா நடைபெறும். திரு. எஸ். எச். பேரின்பநாயகம் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார் ஆசிரியர் திரு கனகசெந்திநாதன், பண்டிதர் ச. பொன்னுத்துரை ஆகியோர் சிறப்புரைவழங்குவர்.

விழாவின் கலைஅரங்கில் மாலைமுத்தமிழ் மன்றத்தாரின் 'பாசக்குரல்' நாடகமும் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

## கிழக்கு மாகாண வெள்ள நிலைமை

கொழும்பு, புதன்

கடந்த 24 மணி நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் மழையின் அளவு குறைந்திருப்பதால் நிலைமை சீர்திருந்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது. கண்டி, நிக்கவெரெட்டியா ஆகிய பகுதிகளிலும் நிலைமை சீர்திருந்திருக்கிறது.

## தீர்மானம் நிறைவேறியது

நல்லூர், புதன்

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலைப் பெற்றூர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பாடசாலையின் தரத்தை உயர்த்தித்தரும்படி கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தலைமையாசிரியர் திரு. வ. கந்தையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

தலைவர்: திரு. வ.கந்தையா, உப-தலைவர் பிரமஸ்ரீ தி. கு. நகுலேஸ்வரக் குருக்கள், இணைக் காரியதரிசிகள்: சு. மாணிக்கம், க. கனகசபை, தனாதிகாரி: திரு. அ. சின்னப்பு. 6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## சமய அறிவு போட்டி

நல்லூர், புதன்

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம் முதன் முறையாக இவ்வாண்டு சமய அறிவுப் போட்டி ஒன்றினை நடத்த ஏற்பாடுசெய்துள்ளது. சமய அறிவை வளர்க்குமுகமாக வருடந்தோறும் சமயப்போட்டிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்,

## பயிர் செய்கைக்குழு

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி மேற்கு பயிர்ச்செய்கைக்குழுவின் நிர்வாகசபைக் கூட்டம் திரு. மு. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில்,"கரவெட்டி மேற்கு கிராமசேவையாளரின் பகுதியிலுள்ள நெற்காணிகளுக்கு 1958-ம் ஆண்டு முதலாம் இலக்க நெற்காணி மசோதா சட்டப்படி ஏக்கரொன்றிற்கு 10 சதவீதம் வரி அறவிடுவதென" ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## கல்விமந்திரியின் பரிசீலனையில்

### கலைமன்ற மகஜர்

யாழ்ப்பாணம், வியாழன்

வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களை பல்கலைக்கழக புகுமுக பரீட்சைக்கு தனித்தனிப்பாடங்களாக அங்கீகரிக்கவேண்டுமென அகில இலங்கை வர்த்தக கலைமன்றம் பல்கலைக்கழகங்களின் வேந்தரான கவர்னர் ஜெனரலுக்கு மகஜர் ஒன்று அனுப்பியிருக்கிறது. அந்த மகஜர் கல்வி மந்திரியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கவர்னர்ஜெனரல் இப்பொழுது அறிவித்துள்ளார். இந்த மகஜரின் பிரதிகள் மூன்று பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களுக்கும் அனுப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழிற்சங்கங்களின் 21 கோரிக்கைகள்

கொழும்பு, புதன்

இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டி அடுத்த வாரம் ஆரம்பத்தில் கூடி தொழிற்சங்கங்களின் 21 கோரிக்கை பற்றிப் பரிசீலனை செய்யவிருக்கிறது

இதுசம்பந்தமான முதலாளிமார் சம்மேளனத்தின் முடிவு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என கமிட்டி வட்டாரங்கள் கூறின.

இதற்கிடையில் தொழிற்சங்கங்களின் 14 யூனியன் கூட்டுக் கமிட்டி, வருகிற சனிக்கிழமை கூடி 21 கோரிக்கை சம்பந்தமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

## அரசாங்க பாராளுமன்ற குழு

கொழும்பு, புதன்

அரசாங்க பாராளுமன்றக் கட்சியின் கூட்டம் ஒன்று விரைவில் நடைபெறவேண்டும் என சில அரசாங்க எம் பி.க்கள் கோரியிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் கமிட்டி இன்று கூடி அரசியல் நிலைமை பற்றி ஆலோசித்தது.

## பயிற்சி நிலையங்கள்

உடுப்பிட்டி, புதன்

"இன்றைய சூழ்நிலையில் படித்த வாலிபர்களில் அனேகமானோர் அரசாங்க உத்தியோகங்களை நம்பிக்கொண்டிருப்பதால் தங்களுக்குத் தெரியாமலேயே பலத்த ஏமாற்றத்திற்காளாகி பொன்னான வாழ்நாட்களை வீணாக்குகின்றனர். இவர்களும் ஓரளவு கட்டிடவேலை, தச்சுவேலை முதலிய கைத்தொழில்களைப் பயின்று அவற்றில் முன்னேற்றமடைய வேண்டுமென்பதற்காக தொழிற் கந்தோர் மூலம் அரசாங்கம் கைத்தொழில் பயிற்சி நிலையங்களை நடாத்திவருகின்றது."

நெல்லியடியிலுள்ள கட்டிடக் கலையியல் பயிற்சிக் கல்லூரி மாணவர் மன்ற விசேஷ பொதுக்கூட்டத்தில் இளைப்பாறிய பருத்தித்துறைப்பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினர்.

## திடீர் சோதனை

கொழும்பு, புதன்

துறைமுகத்தில் கடலிலும் கப்பலிலும் வேலைகள் ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க திடீர் சோதனை நடத்தப்படும் எனத் தெரிகிறது.

## கலைஞர்கள் வருகைக்கு நிபந்தனை

உடுப்பிட்டி, புதன்

வதிரி நாடக கலாமன்றத்தின் விசேட பொதுக்கூட்டம் திரு. எஸ். கே. சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண பிரதேச கலாமன்றம் நடப்புவருடத்திற்கு ஆறு நாதஸ்வரக் கலைஞர்களையும் தவில் கலைஞர்களையும் இந்தியாவிலிருந்து அழைப்பதைக் கழகம் வரவேற்பதுடன் அழைக்கப்படும் கலைஞர்களை சாதி, சமய பாகுபாடின்றி சேவை செய்யக் கட்டாயப்படுத்தும்படி வடமாகாண அதிபரைக் கேட்டுக்கொள்வதென்னும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்திற்கு இசைக்கருவிகள் இந்தியாவிலிருந்து வரவழைப்பதற்கு அரசாங்கம் உதவி செய்வதாயின் பாரபட்சமற்ற சேவையைக் கலைஞர்கள் செய்ய வேண்டுமெனவும் அப்படி ஒருசாராருக்குமட்டும் சேவை செய்பவர்களுக்கு அரசாங்கம் எவ்வித உதவியும் செய்யக் கூடாதென்றும் பிரதம மந்திரியையும் கலைகலாச்சார மந்திரியையும் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானங்களின் பிரதிகள் பிரதமமந்திரி, கலை கலாச்சார மந்திரி, யாழ். அரசாங்க அதிபர், உடுப்பிட்டித்தொகுதி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.


கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்






நான் அணிவது

இலஸ்ட்டோ காலணிகள்

மலர் இதழ் போன்ற பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்ட்டோ காலணிகள் பாவிப்பதால் நோகும் காய்ப்புகளிலிருந்தும், வெட்டுகளிலிருந்தும் விடுதலை பெறுவீர்கள். பாத சௌகரியத்திற்கு, இலஸ்ட்டோ காலணிகள். நீடிய கால பாவனைக்கு உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெட்ஸ்

1033

# 'ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடற்குரிய காலம்'

## நாடக நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி வித்தியானந்தன்

நல்லூர், புதன்

"கடந்த சில மாதங்களாக எழுத்தாளர் உலகை ஒரு குழப்பமான சூழ்நிலை கலக்கிவருகின்றது. இந்தக் குழப்பமான சூழ்நிலையிலே பண்பாடான முறையில் பூதத்தம்பி நாடகம் வெளிவருவது நல்ல முயற்சி. இந்நூலை வெளியிடும் கணேசையர் தமிழ்ச் சங்கம் அனைவரதும்பாராட்டுக்கும் உரியது. இச் சங்கத்தாரின் பண்பான சேவையும் உழைப்பும் பிறர் பின்பற்றுதற்குரியன" என்று இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் 'பூதத்தம்பி என்னும்' நாடக நூலை வெளியிட்டுவைத்துப் பேசுகையில் கூறினர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் திங்கட் கிழமை மாலை கணேசையர் தமிழ்ச் சங்கம் திரு த. சண்முகசுந்தரம் எழுதிய 'பூதத்தம்பி' என்னும் நாடகநூல் வெளியீட்டுவிழாவை நடத்தியது. கல்லூரி அதிபர் தெ.து. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில் கலாநிதி சு. வித்தியானந்தன் தொடர்ந்து பேசியதாவது:-

1961-ம் ஆண்டிலும் 1962-ம் ஆண்டிலும் ஈழத்திலே பல நூல்கள் வெளியாகின. வெளியீட்டகங்கள் சில நிறுவப்பட்டுப் பல நூல்கள் ஈழத்திலேயே வெளியிடப்பட்டன. தனிப்பட்ட அச்சகங்களும் நிறுவனங்களும் சிறுகதைத் தொகுதிகளையும் நாவல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டன. ஈழத்து இலக்கியவளர்ச்சியில் அந்த இரு ஆண்டுகளும் சிறப்பாகக் குறிப்பிடுதற்குரியன. எழுத்தாளரிடையே உணர்ச்சியும் உற்சாகமும் உழைப்பும் கலை ஆக்க முயற்சியும் காணப்பட்டன. பல்வேறுபட்ட கொள்கைகளையுடைய எழுத்தாளர் ஒன்றுகூடி உழைத்தனர்.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட சில சம்பவங்கள் காரணமாக எழுத்தாளர் மத்தியில் பொருமை, கயநலம், பகைமை என்பன தலைதூக்கின. இது ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அருவருக்கத்தக்க கட்டம். ஒழுங்காக எழுதிவந்த எழுத்தாளர்கூட விவாதங்களில் ஈடுபட்டுப் பகையை வளர்த்து வந்தனரே தவிர படைப்புக்களை அளிக்கவில்லை. வீண் சண்டைகளிலும் நிந்தைகளிலும் நேரத்தையும் மூளையையும் வீணுக்காது படைப்புக்களைப் பொது மக்கள் மத்தியில் நடமாட விட்டுபொது மக்களின் ஆதரவையும் மதிப்பையும் பெறுவதே சாலச் சிறந்தது.

எழுத்தாளரைப் பொதுமக்களுடன் தொடர்புகொள்ள வைப்பவர்கள் வெளியீட்டு நிலயத்தாரே! பரந்துபட்ட மக்கட்சமுதாயத்தில் எழுத்தாளனை நடமாடச்செய்கின்ற இப் பணி ஒப்பற்றது எழுத்தாளனின் முயற்சிக்கு ஒரு அந்தஸ்தைக் கொடுக்கின்றது நூல் வெளியீடு. இதனால் எழுத்தாளன் மன அமைதியும் ஊக்கமும் பெற்று ஆக்க வேலையைத் தொடர்ந்து செய்கின்றான்.

எழுத்தாளனுக்கு ஆதரவளிப்பது வாசகர் கடன். பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் வாழும்ஈழத்தில் ஓர் எழுத்தாளன் தனது நூலின் 500 பிரதிகள் விற்பதற்கே சங்கடமாக இருக்கின்றது. இதனாலேயே சில பதிப்பகங்கள் முரலாவது வெளியீட்டுடன் நிலையத்தை மூடிவிடுகின்றன, நூல்களைக் காசு கொடுத்து வாங்குவோர் தொகை பெருகவேண்டும் நூல்களை இரவல் கொடுக்கும் பழக்கம் ஒழியவேண்டும்.எழுத்தாளனை ஆதரிக்க அவர்களது நூல்களை வாங்கிப் படிக்க அனைவரும் முயற்சிஎடுக்கவேண்டும்.

தமிழில் சிறுகதை இலக்கியம் எவ்வளவு அதிகமாய் இருக்கிறதோ, அவ்வளவு குறைவாக நாடக இலக்கியம் இருக்கிறது. ஒரு கதைக்கு நாடக உருவமும் நாடகத்தன்மையும் கொடுப்பதற்கு மிகுந்த கற்பனை ஆற்றல் வேண்டும். நாடக அமைப்பு எளிதில் செய்யக்கூடிய ஒன்றல்ல. பாத்திரங்களின் குண மோதல்களை அவர்களுடைய உரையாடலிலும் நடிப்பிலும் காட்டுவது இலகுவானதல்ல. கதைச்செறிவும், பாத்திரவார்ப்பும், இலக்கியத்தரமும் ஒருங்கே அமைய நாடகம் எழுதக்கூடியவர் மிகச் சிலரே'

இன்று ஈழத்திலே சிலர் நாடகங்களை எழுத முன்வந்துள்ளனர். எனினும் இவ்விலக்கியத்துறை போதிய தொகையினரைக் கவரவில்லை என்றே கூறவேண்டும். இத்துறையில் இடையருது ஆர்வம்காட்டிவரும் திரு. சண்முகசுந்தரம் தமது இரு வரலாற்று நாடகங்களிலும் பெரும் வெற்றி கண்டுள்ளார்.

'பூதத்தம்பி' நாடகத்திலே 17-ம் நூற்றுண்டுக்குரிய பாத்திரங்கள் உயிர்த் துடிப்புடன் வாழும் மனிதராக இயங்குகின்றன. காலக்களரியில் உணர்ச்சி மோதல்களோடு பாத்திரங்களின் குண இயல்பும் துலங்கப்பெறுகின்றன. துன்பியல் நாடகங்களில் மாறுபடும் சக்திகளின் மோதல் துலக்கமாகத் தெரியவேண்டும். பூதத்தம்பி நாடகத்தில் இம்மோதல் முக்கியமானதாக அமைகின்றது.

### தமிழன் பண்பாட்டின் சின்னம்

விலாசமாக ஆடிப் புகழ் பெற்ற இக் கதையை சில மாற்றங்களுடன் இக்கால நாடக முறையில் அமைக்கப்பட்டுள்ளது பாராட்டுதற்குரியது. தமிழனுடைய பண்பாட்டின் சின்னமாகப் 'பூதத்தம்பி'யைப் படைத்திருப்பதும் போற்றத் தக்கது. மேடையில் இலகுவில் நடிப்பதற்கு ஏற்ற முறையில் இது அமைந்துள்ளது. கதை நிகழ் இடங்கள் மூன்ருக இருப்பது பிற நாடக ஆசிரியர்கள் கட்டாயம் பின்பற்றவேண்டியது. ஒளி இருந்தால் இருள் இருப்பது உண்மை என்பது போல பண்பட்ட சிறந்த எழுத்தாளர் இருப்பதனாலேயே பண்பாடற்றகையாண்டிச்சிருஷ்டிகாரரும் இருக்கிருர்கள்.

நூல் வெளியீட்டுவிழாவிற்கு தலைமைவகித்த கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் தமது உரையில் கூறியதாவது:

அரசாங்க உதவியுடன் இயங்கும் சபைகள், ஸ்தாபனங்களைவிட தனித்துநின்று செயல்படும் சங்கங்களின் பணி உயர்வானவை. தமிழை வழர்க்கும் நோக்கத்தை தூயமனதுடன் மேற்கொண்டுள்ள கணேசையர் தமிழ்ச் சங்கம் இலங்கையிலேயே மிகப்பெரிய நிறுவனமாக வளரும் வாய்ப்புப் பெற்றிருப்பது நமது அதிருஷ்டமே. தமிழ்மொழி இத்தகைய நிறுவனங்களால் பெருமையும் வளர்ச்சியும் பெறுவதற்கான அறிகுறிகள் ஏராளமாக உண்டு.

'பூதத்தம்பி' நாடகநூலைப் பற்றி ஆய்வுரைகள் வழங்கிய புலவர் நா. சிவபாதசுந்தரம், கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் நூலாசிரியரின் நாடகப்புலமையைப் பாராட்டிப்பேசினர்.

நூலாசிரியர் திரு. சண்முகசுந்தரம் பேசுகையில்,யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் பாரம்பரியத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் தமிழ் நூல்கள் வெளிவரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 26-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 குரல் வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 குரல்வகை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாலர் சழகம், 5-45 திரை இசை.

இரவு 6-10 விலைவாசிகள், 6-15 கிராமநிகழ்ச்சிகள், 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர்நாடகம் — 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' — என். பொன்னுத்துரை. 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 8-45 இஸ்லாமிய பாடல்கள் — எம். ஏ. ஹசன்அலியார், 9-15 கவிக் கோவை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 துதிப்பாடல்கள், 8-15 காரைக்குடி கம்பன் விழா — வர்ணனை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 வயலின், 2-40 ஜயபேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 உபநிஷதக் கதைகளின் சாரம், 7-45 ராகம், தானம், பல்லவி — எம். டி. ராமனுதன் — பாட்டு, 8-40 குரல்இசை, 9-15 வீரபாரதம் — இசைச்சித்திரம், 9-30 அகிலபாரத நாடகம்.

## ஸ்டான்லி கல்லூரி வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் ஸ்டான்லி மத்திய மகாவித்தியாலயத்திற்குமிடையே நெல்லியடி அ. ம. ம. வித்தியாலய மைதானத்தில் ஒரு கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டான்லி மத்திய மகா வித்தியாலயக் கோஷ்டியினர் தமது முதலாவது இன்னிங்சில் 88 ரன்களைப் பெற்றனர். நெல்லியடி அ. ம. ம. வித்தியாலயம் 7 ரன்களைப் பெற்றது.

இரண்டாவது இன்னிங்சில் ஸ்டான்லி மத்திய மகா வித்தியாலயம் 9 விக்கெட்டுகளை இழந்து 98 ரன்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. நெல்லியடி அ. ம. ம. வித்தியாலயம் 8! ரன்களைப்பெற்று ஆட்டத்தையிழந்தது.

ஸ்டான்லி மத்தியமகா வித்தியாலயம் 98 ரன்களால் வெற்றியீட்டியது.

## நாவாந்துறை ரோ. க. பாடசாலை

யாழ்ப்பாணம், புதன்

வருடாந்த தேகாப்பியாசப் போட்டியில் நாவாந்துறை ரோ. க. பாடசாலை பெற்ற வெற்றியின் விபரம் வருமாறு:

**யாழ்ப்பாணப் பட்டணப் பிரிவு**

ஆண்கள்: 16 வயதுக்குட்பட்டவர்கள்—1-ம் இடம், ஆண்கள்: 13 வயதுக்குட்பட்டவர்கள்—1-ம் இடம், பெண்கள்: 16 வயதுக்குட்பட்டவர்கள்—3-ம் இடம், பெண்கள்: 13 வயதுக்குட்பட்டவர்கள்—3-ம் இடம்.

**யாழ்ப்பாண மாவட்டப் பிரிவு**

ஆண்கள்: 16 வயதுக்குட்பட்டவர்கள்—2-ம் இடம், ஆண்கள்: 13 வயதுக்குட்பட்டவர்கள்—3-ம் இடம்

## கேள்விப் பத்திரம்

### உணவுப் பொருட்களை லொறி மூலம் கொண்டு செல்லல்

யாழ்ப்பாணம் சுங்கப் பகுதியிலிருந்து, உணவுப் பொருள்களை பெறும் பல்வேறு ஸ்டோர்களுக்கும், புகையிரத வாகன்களுக்கும் அரிசி, மாவு, சீனி மூடைகளை கொண்டு செல்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி கேள்விப் பத்திர விண்ணப்பப் பத்திரத்தை யாழ்ப்பாணம் 25, புறண்ட் வீதியிலுள்ள யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு துறைமுக சேவை சமாசக் காரியாலயத்தில், வேலை நேரத்தின்போது பார்வையிடலாம்.

தேர்ந்தெடுக்கப்படும்கேள்விதாரர், யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கியில் பிணைப் பணமாக ரூ. 250 செலுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும்கேள்விதாரர் 24 மணிநேர முன்னறிவித்தலில் வேலையைப் பாரமெடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாண துறைமுகத்தில் விரைவில் எதிர்பார்க்கப்படும் உணவுப்பொருட்கள் சம்பந்தப்பட்டதற்கு மாத்திரமே இக்கேள்விப்பத்திரம் செல்லுபடியாகும்.

கேள்விப்பத்திரங்கள் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கே. சரவணமுத்து,
தலைவர்.
யாழ். மா.கூ. து. சே. சமாசம்,
இல: 25, புறண்ட் வீதி,
யாழ்ப்பாணம். 126

## சிதம்பரா வெற்றி

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தாரால் நடாத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சிதம்பராக் கல்லூரி வெற்றியீட்டியது.

**புள்ளி விபரங்கள்**

சிதம்பராக் கல்லூரி 15, 15, 7, 15. விக்கினேஸ்வராக் கல்லூரி 10, 5, 15, 7.

## பாம்பு தீண்டி மரணம்

உடுப்பிட்டி, புதன்

வல்வெட்டியைச்சேர்ந்த சோமசுந்தரம் பாறுவதி (வயது 55) என்னும் பெண்மணி முத்திரைப்புடையன் என்னும் விஷப் பாம்பு கடித்து மரணமானர்.

## பொம்பஸ் கழகம் வெற்றி

உடுப்பிட்டி, புதன்

கொற்றுவத்தை 'விக்ரோரியா' விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி பொம்பஸ் விளையாட்டு கழகத்திற்கும் வல்வெட்டி றேஞ்சஸ் கழகத்திற்குமிடையே விக்ரோறியா விளையாட்டுத் திடலில் நடைபெற்ற போட்டியில் வதிரி பொம்பஸ் கழகம் வெற்றியீட்டியது.

**புள்ளிவிபரம்**

பொம்பஸ் 15, 15. றேஞ்சஸ் 13, 14.

## ஜம்முவில் வெடிச்சம்பவம்

ஸ்ரீநகர், மார்ச் 25

ஜம்முவில் சட்டசபைக்குப் பின்னல் சபாநாயகர் அறைக்கருகில் ஒரு குண்டு வெடித்தது. இதுபற்றி சட்டசபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன. பாகிஸ்தானிலிருந்து இந்த வெடிகள் கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டது.


## தேவை

பழை-வீமன்காமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஓர் முகாமையாளர் உடன் தேவை. 30-3-64-க்கு முன்பதாக காரியதரிசியால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தராதரம்:- 8-ம் தரம் சித்தியடைந்தவராயும், வியாபாரத் துறையில் அனுபவமுள்ளவராயுமிருத்தல் நன்று. கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலையில் சித்தியெய்தியோர்களுக்குக் கூடிய சலுகை உண்டு.

வயது:- 25-க்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.

வேதனம்:- மாசம் ரூபா 100/- மட்டும்.

பிணை:- ரொக்கம் 1000/-
ஆதனம்:- 2000/-

மு. இரத்தினம்
காரியதரிசி
127

## வரி விளம்பரம்

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### தேவை

சிமெண்ட் பைக்கட் பேப்பர் தேவை.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 72

### மாணவர் தகுதி அறிக்கை

தவணைப்பரீட்சைப் பெறுபேறு குறிக்கும் மாணவர் தகுதி அறிக்கை100-க்கு ரூ.15/- பாடசாலை விலாசம் அச்சிட ரூ. 3/- மேலதிகம். முற்பணத்துடன் ஓடர் அனுப்புக. கலாபவன அச்சகம், பருத்தித்துறை. 65

### அரைச்சலார்

அனேகரக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62


## 7-ந் திகதி பாடசாலை மூடப்படும்

கொழும்பு, புதன்

வருகிற ஏப்ரல் 7-ந் திகதி பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்படும் என்றும், ஏப்ரல் 28-ம் திகதி திறக்கப்படும்என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சினிமாப்படக் கமிஷன்

கொழும்பு, புதன்

இருவருடங்களுக்கு முன் நியமிக்கப்பட்ட சினிமாப்படக் கமிஷன் அடுத்த இரண்டு வாரங்களில் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கமிஷனின் தலைவர் திரு. ஜே. விக்கிரமசிங்கா

## மதுரை பல்கலைக்கழகம்

சென்னை, மார்ச் 16

சென்னை பல்கலைக்கழகத்தைப்போல் மதுரையிலும் ஒரு பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்படவிருப்பதாய் முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்தார்.

# பெண்ணின் மரணத்திற்கு ஆஸ்பத்திரி நிர்வாகமே காரணம்

## அசிரத்தை பற்றி மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

"யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் காலஞ் சென்றவர் மரணமடைந்த நிலைமை, ஆஸ்பத்திரி நிர்வாக சீர்கேட்டின் பாரதூரமான எதிரொலியேயாகும்.

ஆபத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறக்கும் வரை தொடர்ந்து நான்கு மணித்தியாலமாக காலமானவருக்கு எதுவித வைத்திய உதவியும் அளிக்கப்படவில்லை".

பஸ்தியாம்பிள்ளை மனைவி பாக்கியத்தின் மீது பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. சிவஞானசுந்தரம், இம்மரணம் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். பிரேத பரிசோதனையின் பின் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

டாக்டர் சி. சிவஞானசுந்தரம் தொடர்ந்து அபிப்பிராயம் தெரிவிக்கையில் கூறியதாவது:

"காலஞ்சென்றவர் மூன்று மாதகாலமாக தனிப்பட்ட வைத்தியரிடமும், ஆயுர்வேத வைத்தியரிடமும் சிகிச்சை பெற்ற பின் இங்கு கொண்டு வரப்பட்டார். இவர் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டதால் அவரை அனுமதித்த டாக்டர் ஒரு தள்ளுவண்டி மூலம் 'வார்ட்'டிற்கு அனுப்பினார். கட்டில்களில் மட்டுமின்றி 20 நோயாளர்கள் பாயிலும் படுத்திருந்த காரணத்தால், இவர் ஒரு வாங்கில் இருக்க அனுமதிக்கப்பட்டார். இவர் மரணமாகும் வரை நர்ஸோ, டாக்டரோ இவர்மீது கவனம் செலுத்தவில்லை. வாங்கிலிருந்து விழுந்து சிறு காயங்களடைந்த சமயமே இந்த வார்ட்டிற்கு பொறுப்பாயுள்ள நர்சு, அவரை பாய் என்ற மரணப்படுக்கையில் படுக்கச் செய்து கடைசி மூச்சு விட உதவியளித்தார். காலஞ்சென்றவர் மரணமாகிவிட்டார் என்று அறிவிக்கும் பொருட்டே

(2-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

# கல்மடு கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியா.

'கல்மடு' கொலைவழக்கு நேற்று முன் தினம் காலை தொடர்ந்து மூன்றாவது தினமாக நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஜூரிகள் வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லையெனக் கூறி தனிமையில் கூடி ஆலோசித்தபின் எதிரியைக் குற்றவாளியல்லவென ஏகமனதாகத் தெரிவித்தனர். ஜூரிகள் ஏகமனதாகக் கூறியதை ஏற்றுக்கொண்ட நீதியரசர், எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

காலஞ்சென்ற குணமணியின் மாமனான சுப்பர் சின்னத்தம்பி, முன்னுக்குப்பின் முரணாகவும் வேறுபாடாகவும் சாட்சியமளித்ததால், நீதியரசர் கடுமையாக எச்சரித்தார்.

இவ் வழக்கில் 1963-ம் ஆண்டு சித்திரைமாதம் 14-ம் திகதி பருத்தித்துறைப்பகுதியைச் சேர்ந்த கல்மடுவில் கந்தப்பு நாகமணி என்பவர் கந்தையாவின் மனைவி குணமணியைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. எஸ. விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக திரு. ரி. எஸ் ஆனந்த குமாரசாமி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

எதிரியின் மனைவியிடம், உமக்காக எதிரிக்கு ஒரு சந்தர்ப்பமளிப்பதாகவும் இனி மேலும் ஏதாவது நடந்தால் பாதுகாபபு உத்தியோகத்தருக்கு அறிவிக்கும்படியும் நீதியரசர் தெரிவித்தார்

எல்லா விபரங்களும் அறியும்வரை, பிஸ்கால் பாதுகாப்பில் இருக்கும்படியும், அதன் பின் 3 வருட நன்னடத்தை பிணையில் செல்ல அனுமதிக்கப் படுவாரென்றும் எதிரியிடம் தெரிவிக்கப்பட்டது.

ஊரணி கொலைவழக்கு

## நன்னடத்தைப் பிணையில் எதிரி விடுதலை

யாழ்ப்பணம், வியாழன்

ஊரணி கொலை வழக்கு நேற்றுக் காலை நீதியசரர் டாக்டர் எச் டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட நீதியரசர் எதிரியை மூன்று வருட காலநன்னடத்தை பிணையில் செல்லுமாறு தீர்ப்பளித்தார்.

அந்த விண்ணப்பத்தில் எதிரி இளம் வயதுடையவராய் இருப்பதாகவும், இதற்கு முன் வேறு குற்றங்கள் இல்லையென்றும், ஏற்கனவே 9 மாதம் விளக்கமறியலில் இருந்திருப்பதாகவும், காலஞ்சென்றவர் சம்பவம் நடந்தபொழுது மது அருந்தியிருந்தாரென்றும் கோரப்பட்டிருந்தது.

இவ்வழக்கில், காங்கேசன் துறைப்பகுதியைச் சேர்ந்த ஊரணியில் 63-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் திகதி மூபூதான் வேலன் என்பவர் வைரவன் குழந்தையனை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. ரீ. கணேசலிங்கம், திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. நடேசன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ, டி. சில்வா ஆஜரானர்.

தீர்ப்பளிக்கு முன் நீதியரசர் இளம் வயதுடையவராய் இருப்பதால் சந்தர்ப்பமளிக்கு முகமாக 3வருடநன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிப்பதாகவும், இனிமேல் மனைவியை அடித்துத் துன்புறுத்தக்கூடாதென்றும், நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு நடக்காவிடில் மீண்டும் தண்டனையளிக்கப்படுமென்றும், எதிரியிடம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'நானும் ஒரு பெண்'

புதுடில்லி, மார்ச் 25

"நானும் ஒரு பெண்" என்ற தமிழ்ப் படத்திற்கு 1963-ம் ஆண்டுக்கான ராஷ்டிரபதியின் வெள்ளிப் பதக்கம் கிடைத்திருக்கிறது. கற்பகம், கர்ணன் ஆகிய இரண்டு தமிழ்ப் படங்களுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்துள்ளன.

## சிங்கள தகுதிப் பரீட்சை

நல்லூர், வியாழன்

மே மாதம் நடைபெறவிருக்கும் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற யாழ்ப்பாணத்திலிருந்து மிகக் குறைவான விண்ணப்பங்களே பரீட்சைப் பகுதிக்குக் கிடைத்துள்ளன.

இம்மாதம் 20-ம் திகதி வரை சிங்களப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தலைமையாசிரியர்களும், அதிபர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென கல்விப் பகுதியினர் அறிவித்திருந்தபோதிலும் இப்பகுதியிலுள்ள தலைமையாசிரியர்களும், அதிபர்களும் பெருமளவில் பரீட்சைக்குத் தோற்றுவதில்லையென முடிவுசெய்து விண்ணப்பிக்காதுவிட்டனர்.

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுமுகமாக விண்ணப்பம் அனுப்பியவர்கள் இப்போது சிங்கள வகுப்பு நடத்த ஏற்பாடு செய்துதரும்படி கல்விப் பகுதியினரைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

சிங்கள வகுப்புகளிற் தோற்றத் தமக்கு வசதிசெய்து தரும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர். யாழ்ப்பாணம் நாக விகாரையில் நடைபெற்று வரும் சிங்கள வகுப்பில் இப்பரீட்சைக்கான பாடங்களைக் கற்பிக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வைமன் வீதியில் வீதி முகப்பில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு விரும்புவோர், இல 10, வைமன் வீதியில் விசாரிக்கவும். 73

### காணவில்லை

24-3-64 ல் காணிப்பதிவுக்கந்தோரில் ஓர் பெரியார் எனது பேனையை வாங்கினர். அவருடைய ஊர் பெயர் தெரியாது. தயவுசெய்து எனதிடத்தில் பேனையை வாங்கிய பெரியாரைக் கீழ்க்காணும் விலாசத்துக்குப் பேனையை அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறேன். பார்சல் செலவு தரலாம். சி. த. பொன்னுத்துரை, உரும்பராய். 77

## மரண அறிவித்தல்

### லோப்பு பஸ்தியாம்பிள்ளை

யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்சமயம் கொட்டாஞ்சேனை ஆசனக்கோவிலில் பங்குக்குரவராகத் தொண்டாற்றுபவருமான வண. எம். பீ. சாயப்பு ஓ எம். ஐ. அடிகளாரதும், பேசாலை கடற்தொழில் இலாகாப் பரிசோதகர் ஏல். பி. பிலிப் அவர்களதும் அருமைத் தந்தையாரும் யாழ். மாநகர சபை உதவி முதல்வர் திரு. ஜே. எஸ். அழகையா அவர்களது மாமனருமான திரு. லோப்பு பஸ்தியாம்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கம் செய்யும் பொருட்டு இன்று 26-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆசனக் கோயில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

79 — ஜே. எஸ். அழகையா

கிரிக்கெட்

# யாழ். இந்து – மத்தியகல்லூரி இன்று 'மோதுகின்றன'

## 5வருடங்களின்பின்னர்ஏற்படும்'சந்திப்பு'

யாழ்ப்பாணம், வியா.

சுமார் ஐந்து வருட கால இடைவேளைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் யாழ் மத்திய கல்லூரியும் இன்று நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் 'மோதிக்' கொள்ளும்.

இருகல்லூரிகளினதும் கிரிக்கெட் கோஷ்டிகளும இன்று பிற்பகல் மூன்றுமணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் 'சந்திக்கும்' இன்று ஆரம்பமாகும். இக்கிரிக்கெட் போட்டி தொடர்ந்து சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறும் வெள்ளிக்கிழமை போட்டி நடைபெருது அண்மையில் நடைபெற்ற 'பெரிய கிரிக்கெட் போட்டி'களில் கலந்துகொண்ட கிரிக்கெட் வீரர்கள் இன்று ஆரம்பமாகும் கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றுவார்கள்.

## மத்திய கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென், ஜோன்ஸ கல்லூரிக்குமிடையே நேற்று நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

## இ. போ. ச ...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

படுவதாகவும், பஸ் சாரதிகள் இப்பகுதியில் உள்ள வான் சாரதிகளுக்கு உடந்தையாக இருக்கிருர்கள் என்றும் மேலதிகாரிகளிடம் புகார்செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பஸ் சாரதிகளுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள புகார் மீது விசாரணை நடத்தப்படவிருக்கின்றது. ஒவ்வொரு பஸ் சாரதிக்கு எதிராகவும் ஒரு மோட்டார் வான் இலக்கமும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். சேவையில் ஈடுபட்டிருக்கும்போது பஸ்களைக் குறிப்பிட்ட இந்த வான்கள் முந்திச் செல்ல அனுமதிப்பதற்குரிய காரணங்கள் பற்றியும் விளக்கும்படி பஸ் சாரதிகளைக் கேட்க மேலதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகவும் தெரிகின்றது.

வட பகுதியில் தற்போது நடைபெற்றுவரும் மோட்டார் வான்சேவை பொதுமக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவதால் வான் சேவை தொடர்ந்து நடைபெறக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ளும்படி போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும மகஜரைப் பல பிரயாணிகள் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர். வான்களில் செல்ல அனுமதிக்கப்படும் பிரயாணிகள் தொகையை அதிகரிக்க உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமெனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

—

துனுக்காய், புதன்

இங்கு மூன்று மாதக் கடும் வரட்சிக்குப் பின்னர் நல்ல மழை பெய்துள்ளது. கடும் மழையினல் அநேக விவசாயிகளின் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

## டெலிபோன் மோசடி வழக்கு

### ஜூன் 3-ல் விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

கே. கே. எஸ். வீதியிலுள்ள திரு. ஏ. எஸ். நடராசாவின் கடையில் டெலிபொன் சம்பந்தமாக ஏமாற்றி பண மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் என்ஜினியர்கள் பகுதியைச் சேர்ந்த 'லைன்ஸ்மன்' சூஸர் சேவியர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, அட்டோர்ணி ஜெனரலின் உத்தரவின்பேரில் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மீண்டும் மறு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரைச் சேர்ந்த சில சிரேஷ்ட உத்தியோகஸ்தர்கள் தெரிவித்திருந்த தகவல்களைத் தொடர்ந்து பொலிஸார் இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு. அமிர்தலிங்கத்தின் கோரிக்கையைத் தொடர்ந்து இவ்வழக்கு சம்பந்தமான மேல் விசாரணை ஜூன் மாதம் மூன்ரும் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## உச்சி மகாநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாட், டுபோக்கோ, பிரேஸில் பொல்வியா, மெக்ஸிகோ, சிலா, றூகே, வெனிசுலா, ஆர்ஜன்டீனு, பின்லந்து, ஆஸ்திரியா, சுவீடின் ஆகிய நாடுகள் அழைக்கப்படும். அங்கோலா, பிரிட்டிஷ் கயானு ஆகியவற்றை அழைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

உப கமிட்டி

உச்சி மகாநாட்டுக்கான நகல் நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாக பல்வேறு பிரதிநிதிகள் இன்று பல யோசனைகள் தெரிவித்திருந்தனர். ஆப்கனிஸ்தான், இந்தியா, இந்தோனேஷியா, யுகோஸ்லேவியா, டுனிஷியா, கியூபா, கானு, ஐக்கிய அரபுக்குடியரசு ஆகிய எட்டு நாடுகளைக்கொண்ட உப கமிட்டியொன்றும் இன்று நியமிக்கப்பட்டது. உச்சி மகாநாட்டிற்கான நகல் நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாக பல பிரதிநிதிகள் தெரிவித்திருந்த யோசனை பற்றி பரிசீலனை செய்து இக்கமிட்டி நாளைய மகாட்டில் நகல் தீர்மானம் ஒன்றைச் சமர்ப்பிக்கும்.

இன்று காலை மகாநாடு கூடிய பொழுதிலும், மகாநாட்டிப் பிரதிநிதிகள் இன்று பிற்பகலும் கூடி பல்வேறு பிரச்னைகள் பற்றி விவாதித்தனர். மகாநாடு நாளை வியாழக்கிழமை காலை மீண்டும் கூடும்.

## தந்தியின் நத்தை வேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் மூன்றும் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்ட தந்தியொன்று மூன்று வாரங்களுக்குப்பின்னர் குறிப்பிட்ட தந்தி அனுப்பியவருக்கே திரும்பி வந்துள்ளது!

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த திரு. த. சிவசுப்பிரமணியம் என்பவர் கடந்த 3-ம் திகதி கொழும்பிலுள்ள தமது சகோதரருக்கு ஒரு தந்தியனுப்பியிருந்தார். ஆனல் இத் தந்தி இம்மாதம் 23-ம் திகதி காலை அனுப்பியவருக்கே திரும்பிவந்துள்ளது. இது சம்பந்தமாக திரு. சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணம் தபால் அதிபருக்கு புகார் செய்துள்ளார்.

## வர்த்தக சபை கஷ்டம்

கொழும்பு, புதன்

உணவுப்பொருள், ஜவுளிகள், இதர அத்தியாவசியப்பொருட்கள் ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு விநியோகிப்பதில் ஏற்படும் கஷ்டங்கள் குறித்து அகில இலங்கை வர்த்தகசபை அரசாங்கத்துக்குப் புகார் தெரிவித்திருக்கிறது.

இலங்கை வர்த்தகர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் இறக்குமதிக் கோட்டா பற்றி மீண்டும் புனராலோசனைசெய்யப்படவேண்டும் என நிதி, வர்த்தக, உணவு மந்திரிகளுக்கு அது அறிவித்திருக்கிறது.